THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

Wednesday, the 26th August 1970.

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, Mr. Chairman (THE HON. THIRU C. P. CHITRARASU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS

'Folidol'

* 21 *Q.*—THIRU SAW GANESAN (on behalf THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(*a*) whether the pesticide "Folidol" is permitted to be used on food-crops;

(*b*) whether reports of deaths of human beings (i) while spraying "Folidol" or (2) due to consumption of "Folidol" sprayed foodgrains have come to the notice of the Government; and

(*c*) if so, the action taken or proposed to be taken thereon?

'பாலிடால்'

திரு. சா. கணேசன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு வேளாண்மை— அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உணவுப் பயிர்கள் மீது 'பாலிடால்' பூச்சிகொல்லி மருந்தைப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளதா?

(இ) (1) 'பாலிடால்' தெளிக்கையில் அல்லது (2) 'பாலிடால்' தெளிக்கப்பட்ட உணவுத் தானியங்களை உண்டதால் மனிதர்கள் இறந்தது பற்றிய அறிக்கைகள் எவையேனும் அரசின் நாட்டத்திற்கு வந்துள்ளனவா?

(உ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட அல்லது எடுக்கக் கருதப்பட்டுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) இல்லை.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

MR. CHAIRMAN: Questions 22 to 25 are postponed.

Waters of Raja Channel

* 26 *Q.*—THIRU P. THIRUGNANASAMBANDAM: Will the Hon. the Minister for Public Works be pleased to state the present stage of the proposal to utilise by lift irrigation the waters of Raja channel to the lands lying in Sanarpalayam, Namakkal Taluk, Salem district?

[26th August 1970

ராஜா கால்வாய் தண்ணீர்

திரு. பி. திருஞானசம்பந்தம் : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினவிற்குப் பதிலாக்க வேண்டுகிறேன்—

சேலம் மாவட்டம், நாமக்கல் தாலுகா, சானூர்பாளையத்தில் இருக்கும் நிலங்களுக்கு ராஜா கால்வாய் தண்ணீரை இறைவை மூலம் உபயோகிக்கும் செயற்குறிப்பு எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : சேலம் மாவட்டம், நாமக்கல் வட்டத்தில் உள்ள சானூர்பாளையம், சேளூர் பிலிக்கால்பாளையம், எஸ். கொண்டலம் ஆகிய கிராமங்களில் 472.87 ஏக்கர் பரப்பளவிற்கு பாசனம் அளிப்பதற்காக ராஜா கால்வாயிலிருந்து நீர் இறைத்துத் தண்ணீர் எடுத்துக்கொள்ளும் செயற்குறிப்பு அரசின் ஆலோசனையில் உள்ளது.

Ganges Waters

* 27. Q.—THIRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government are aware of the news item that the Union Minister for Irrigation stated that it was possible to bring the waters of the Ganges to Tamil Nadu and that the Southern States should come forwtrd to meet the expenditure for conducting land survey; and

(*b*) the view of the Tamil Nadu Government regarding this?

கங்கை நதி நீர்

திரு. ஆர் கிருஷ்ணசாமி நாயுடு : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கங்கை நதி நீரை தமிழ் நாடு வரை கொண்டுவருவது சாத்தியமென்றும், இதற்கான நில அளவை நடத்துவதற்காகும் செலவை தென் மாநிலங்கள் ஏற்கவேண்டுமென்றும் சென்னையில் மத்திய அரசின் மாண்புமிகு பாசன அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டதாக வெளியான செய்தியை அரசு அறியுமா?

(இ) இது பற்றி தமிழக அரசின் கருத்தென்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) & (இ) இது குறித்து ஆய்வு செய்யுமாறு பாசன ஆணைக்குழுவை அரசு கேட்டுள்ளது.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : தலைவர் அவர்களே, கங்கை நீரைத் தமிழ்நாடு வரையில் கொண்டுவருவது பற்றிய மத்திய அரசின் ஆய்வு எந்த நிலையில் இருக்கிறது? அந்தத் திட்டத்திற்காகும் செலவு என்ன என்பதைப் பற்றி ஏதேனும் கூற முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : கங்கையையும் காவிரியையும் இணைக்கிற இந்தத் திட்டம் மத்திய அரசின் மாண்புமிகு நீர்ப்பாசன அமைச்சரால் சொல்லப்பட்ட கருத்தாகும். அரசிற்கு எந்தவிதமான அறிவிப்பும் வரவில்லை. அப்படி வந்தால், இந்த அரசு அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறது. இதுகுறித்து இர்ரிகேஷன் கமிஷனை ஆராயும்படி கேட்டுக்கொண்டிருக்கிறோம்.